**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.232/2022**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முத்துச்சுமதி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ராமசாமி | கணவர் பெயர் | : ஆனந்தராஜ் |
| கிராமம் | : அம்பிளிக்கை | வயது | : சுமார் 47 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 10.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

நானும் இவ்வழக்கு வாதி சக்திவேல் என்பவரும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் என்றால் ? ஆமாம். வாதி சக்திவேல் எங்களது ஊரில் ஒரு சிறிய டீ கடை வைத்துள்ளார் என்றால் ? ஆமாம். மேற்படி சக்திவேல் என்பவர் காய்கறி மார்க்கெட்டிற்கு காய்கறிகளை எடுத்து வருவதற்காக டெம்போ வைத்து தொழில் செய்து வருகிறார் என்றால் ? ஆமாம். தற்போதும் டெம்போ வைத்து தான் ஓட்டி வருகிறார் என்றால் ? ஆமாம். தாவா சொத்தினை காலி மனையிடமாக கிரையம் பெற்று பின்பு வீடு கட்டப்பட்டது என்றால் ? சரிதான். நான் எனது தோட்டத்திலேயே வசித்து வருகிறேன் என்றால் ? ஆமாம். இவ்வழக்கு வாதி தொழில் சம்மந்தமாக வேறு இரு நான்கு சக்கர வாகனங்களும் வைத்து தொழில் செய்து வந்தார் என்றால் ? சரிதான். அவர் செய்த தொழில் வழியாக கிடைத்த வருமானத்தை வைத்தும், வங்கியில் கடன் பெற்றும், வீடு கட்டினார் என்றால் ? ஆமாம். மேற்படி வீட்டை தவிர வேறு எந்த வீடுகளும் வாதிக்கு இல்லை என்றால் ? ஆமாம். வாதிக்கு தொழில் நஷ்டம் ஏற்பட்டதாலும், தன்னுடைய மகனின் படிப்பு செலவிற்காகவும் பணம் தேவைப்பட்டதால் கடன் என்னிடம் கேட்டார் என்றால் ? கடன் கொடுக்கவில்லை. பணம் கொடுத்துவிட்டு

சொத்தினை கிரையம் எழுதி வாங்கினோம். சொத்தின் அசல் கிரைய ஆவணம் வாதி வசம் தான் உள்ளது என்றால் ? சரியல்ல. என் வசம் தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 5, பத்தி எண்.9–ல் தாவா சொத்தை எனக்கு கிரையம் செய்யும் முன், தாவா சொத்தை பொறுத்து லெட்சுமி விலாஸ் வங்கியில் அடமானம் கடன் பெற்றிருந்ததில் மேற்படி கடனை என்னிடம் பெற்ற கிரைய தொகையில் இருந்து செலுத்தி 07.03.2018ம் தேதி செல் ரசீது பதிந்த நிலையில் அசல் ஆவணம் வங்கியில் இருப்பதாகவும், வங்கியில் இருந்து பெற்று என்னிடம் கொடுத்ததாகவும், வாதி எனது உறவினர் என்பதால் வாதியின் பேச்சை நம்பி பெரிதுபடுத்தாமல் இருந்துவிட்டேன் என்று சொல்லியுள்ளது வழக்கிற்காக சொல்லக்கூடிய பொய் என்றால் ? சரியல்ல. சொத்தினை கிரையம் பெற்ற பிறகு வருவாய் துறை ஆவணங்களையோ, மின் இணைப்பு எண்ணில் உள்ள பெயரையோ எனது பெயருக்கு முறையாக மாற்றவில்லை என்றால் ? சரியல்ல. முறைப்படி மாற்றியுள்ளோம். இந்த வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்ககூடிய நிலையில் தான் பட்டாவில் பெயர் மாற்றம் செய்துள்ளோம் என்றால் ? சரிதான். வழக்கு தாக்கல் செய்த சமயத்திலேயே வாதி பெயரில் உள்ள பட்டா, மின்கட்டண ரசீது, வீட்டு வரி ரசீதுகள் வாதி பெயரில் உள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் ? தெரிந்து கொண்டேன். தெரிந்து கொண்ட பிறகு தான் பெயர் மாற்றம் செய்தேன். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் ? சரிதான். பட்டாவும், நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் முறைப்படி மாற்றிக் கொண்டோம் என்றால் ? சரிதான். எங்களது அம்பிளிக்கை கிராமத்தில் தாவா சொத்து ஒரு சென்ட் நில மதிப்பு தொகை ரூ.5 இலட்சத்திற்கு விலை போகும் என்றால் ? தற்போது தொகை ரூ.4 இலட்சம் அல்லது ரூ.4,50,000க்கு விலை போகும். வீட்டில் எத்தனை அறைகள் உள்ளது, அந்த அறைகளின் நீளம், அகலம் தெரியாது என்றால் ? சரியல்ல. எனக்கு

தெரியும். வீட்டில் இரண்டு அறைகள் உள்ளது. ஒரு ஹால் உள்ளது, சுற்றுச் சுவர் மற்றும் கேட் உள்ளது. 3 செண்ட்டிற்குள் வீடு அமைந்துள்ளது. வீட்டிற்குள் என்ன கலர் டைல்ஸ் போட்டுள்ளார்கள் என்றால் ? வெள்ளைக் கலர் டைல்ஸ் போட்டுள்ளார்கள். வாதி தொகை ரூ.3 இலட்சம் என்னிடம் கடன் கேட்டதால் பொறுப்பிற்காக சொத்தினை கிரையம் எழுதிக் கொடுக்கும் படி நாங்கள் கேட்டதால் வாதி சொத்தினை கிரையம் எழுதிக் கொடுத்தார் என்றால் ? சரியல்ல. எனது கணவர் வட்டிக்கு பணம் கொடுத்து வாங்கும் தொழில் செய்து வருகிறார் என்றால் ? இல்லை. என்னிடம் கடன் தொகை ரூ.3 இலட்சம் தொகையினை கடனாக பெற்றதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 க்கு ரூ.3 வீதம் வட்டி செலுத்தி வந்தார் என்றால் ? சரியல்ல. கொரோனா காலம் ஏற்பட்டு விட்டதால் இவ்வழக்கு வாதி எனக்கு சரியாக வட்டி தொகையை செலுத்த இயலாத நிலை ஏற்பட்டு விட்டது என்றால் ? சரியல்ல. அவ்வாறு வட்டி தொகையினை சரிவர செலுத்தாத காரணத்தினால் தான் எனக்கும், வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் ? சரியல்ல. இவ்வழக்கில் தொகை ரூ.3 இலட்சம் அசல் தொகைக்குரிய வட்டியையும், அசலையும் திருப்பி செலுத்துவதாக தான் இவ்வழக்கு வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் ? நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. வாதிக்கும், எனக்கும் வேறு எந்தவிதமான மன வருத்தமும் கிடையாது என்றால் ? சரிதான். நான் வாதிக்கு சொத்தினை திருப்பி கிரையம் எழுதித் தர வேண்டும் என்ற நிலையில், நான் வாதியிடம் பெற்ற கிரையமானது செல்லாது என்று சொன்னால் ? சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக கிரையத்திற்கு முன்பாக ஒப்பந்தம் எதுவும் எனக்கும் வாதிக்கும் இடையே ஏற்படவில்லை என்றால் ? இல்லை. சாட்சி மீண்டும் ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளித்தார். வாதிக்கு உள்ள ஒரே வீட்டில் அவர் வசித்து வருவதால் சொத்தினை விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் ? சரியல்ல. தாவா சொத்தினை உண்மையிலேயே நான் கிரையம் பெற்றிருக்கும்பட்சத்தில் சொத்திற்குரிய வருவாய் துறை ஆவணங்கள், மின்கட்டண ரசீதுகள், இதர

ரசீதுகளில் எனது பெயரை மாற்றி இருப்போம் என்றாலும், அவ்வாறு கிரையம் பெறாத காரணத்தினால் தான் சொத்துக்களில் நாளது வரை எனது பெயரில் பெயர் மாற்றம் ஏற்படுத்தவில்லை என்றாலும், பொறுப்பிற்காக கிரையம் எழுதிக் கொடுத்த காரணத்தினால் தான் சொத்தில் பெயர் மாற்றம் எதுவும் ஏற்படுத்தவில்லை என்றால் ? சரியல்ல. தாவா சொத்தினை வேறு நபர்களுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்ய முயற்சி மேற்கொண்டதால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்ய கட்டாயம் ஏற்பட்டது என்றால் ? சரியல்ல. நான் ஏற்படுத்திய கிரைய ஆவணமானது கடன் அடிப்படையில் தொகை பெற்றுக் கொண்டு கிரைய ஆவணம் ஏற்படுத்தியதால் அசல் வழக்கை பொறுத்து வாதி கோரிய படி தீர்ப்பாக வேண்டும் என்றால் ? சரியல்ல.

C
JAYAPPRAKASH

Digitally signed
by C
JAYAPPRAKASH
Date:
2025.11.10
17:11:13 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்